11

# சிறையிருப்பின் காலம்,

# கி.மு. 586–536

## *எருசலேமின் வீழ்ச்சியிலிருந்து செருபாபேலின் கீழ் திரும்பி வந்தது வரை*

**அறிமுகம் —மறுகண்ணோட்டமும் தொகுப்புரையும்.**—இப்பொழுது நாம் மனிதனின் மற்றும் பாவத்தின் வரலாறு, மீட்பின் தொடக்க கால நிலைகள் ஆகியவற்றை அடையாளம் கண்டுள்ளோம். தேர்ந்தெடுக்கப் பட்ட மக்களின் பதினைந்து நூற்றாண்டுகள் அளவான நற்பேறுகளை, ஆபிரகாமின் அழைப்பு முதல் பின்வரும் தொடர்ந்த காலங்கள் வரை: முற்பிதாக்கள், அடிமைத்தனம், அலைந்து திரிதல்கள், வெற்றி கொள்ளுதல், நியாயாதிபதிகள், ஒன்றிணைந்த இராஜ்யம், இரட்டை இராஜ்யம், மற்றும் தனியாக யூதா மட்டும் பின் தொடர்ந்து கண்டோம். தாவீது மற்றும் சாலொமோனின் நாட்களில் இன வாழ்வின் மகிமையுள்ள எழுச்சியையும் அதைத் தொடர்ந்த பிரிவினை மற்றும் வீழ்ச்சியையும் நாம் கண்டுள்ளோம்.

வடக்கு இராஜ்யமானது அரசியல் இருட்டிலும் ஆவிக்குரிய இருளிலும் கீழாகச் சென்றுள்ளது. யூதாவோ, நூற்று நாற்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக தகுதி வாய்ந்த வாழ்வுக்குப் பின்பு முறிந்து போகின்றது, எருசலேம் சிதிலங்களாகின்றது, அரசரும் மக்களும் எழுநூறு மைல்கள் தொலைவில் இருந்த பாபிலோனுக்கு நம்பிக்கையற்ற சிறையிருப்பிற்கு இழுத்துச் செல்லப்படுகின்றனர். எவ்விடத்திலும் மிருகத்தனமும், முழுமை யான மூட நம்பிக்கையும் விக்கிரகாராதனையும் வெற்றி முழக்கமிட்டுக் கொண்டுள்ளது. மனிதனுக்குத் தோன்றுகின்ற (கருத்துக்கள்) யாவற்றிலும் மனித மீட்புக்கான பரிசோதனையானது தோல்வியாகவே உள்ளது; தேவனைப் பற்றிய அறிவானது என்றென்றைக்குமாக ஒழிந்து போயிற்று. ஆனால் இது பரிசோதனையாக இருக்கவில்லை. இருள்மிக்க இரவிலிருந்து நம்பிக்கையின் விண்மீன் எழும்பிற்று. வடக்கு இராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, யூதாவின் வீழ்ச்சி மற்றும் யூதா நாடு கடத்தப்பட்ட நிகழ்ச்சி ஆகியவற்றின் போது, மீகா, ஏசாயா, எரேமியா, தானியேல் மற்றும் சகரியா போன்ற தீர்க்கதரிசிகள், கிறிஸ்து உலகளாவிய தம்முடைய ஆவிக்குரிய ஆளுகையைச் செய்வதற்காக வர இருந்தது பற்றிய தங்களின் மிக மேன்மையான தீர்க்கதரிசனங்களை எழுதினார்கள். எபிரெயர்மீது தேவனு டைய ஆளுகை என்பது ஒரு முட்புதர் போன்றதாகவே இருந்தது என்பதும் அதிலிருந்து ஒரு தூய்மையான ஆவிக்குரிய இராஜ்யமானது முழுமையாக

*மலர்ந்து கனி தர வேண்டும் என்பதும் மங்கலாக உணரப்பட்டதாக இருக்கத் தொடங்குகின்றது. மலர் மலரும் வரையில் முட்புதர் நிலை நின்றாக வேண்டும். எனவே, யூதா நாடு கடத்தப்பட்டு சிதறடிக்கப் பட்டிருந்தாலும், ஒரு திரும்புதல் நிலையும் இன வாழ்வின் புதுப்பித்தலும் இருக்க வேண்டும்.*

*ஏசாயா, மீகா, உல்தாள் மற்றும் எரேமியா போன்ற தீர்க்கதரிசிகளினால் அடிமைத்தனம் பற்றிய விஷயங்கள் மீண்டும் மீண்டும் முன்னுரைக்கப் பட்டன.*[1] *இந்த தீர்க்கதரிசனங்கள் நேபுகாத்நேச்சார் அறியாத நிலை யிலேயே, அவர் எருசலேமின்மீது மேற்கொண்ட தொடர்ந்த படை யெடுப்புக்கள், யூத மக்களை (பாபிலோனுக்கு) கொண்டு செல்லுதல் ஆகியவற்றினால் நிறைவேற்றப்பட்டன.*

***1. எரேமியாவும் எகிப்துக்கு நாடு கடத்தப்படுதலும் (2 இரா. 25:22-26; எரே. 40-44).***—*எருசலேமின் அழிவுக்குப் பிறகு எஞ்சியிருந்த குறைவான மக்கள் உழவுத் தொழிலாளர்களாகவும் திராட்சத் தோட்டப் பராமரிப் பாளர்களாகவும் இருப்பதற்கென்று விட்டுச் செல்லப்பட்டனர். எரேமியா பாபிலோனுக்குப் பத்திரமாய் நடத்திச் செல்லப்படுவதற்கு இணங்காமல், தாம் நேசித்த நாட்டின் சேதாரங்களுக்கு மத்தியில் உலாவி வருதலையே தேர்ந்து கொள்கின்றார். ஆனால் எஞ்சியிருந்த மக்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கின்றனர், அவர்களின் ஆளுநராயிருந்த கெதலியா, இஸ்மவேல் என்பவரின் கீழ் செயல்பட்ட யூத குல சூழ்ச்சியாளர்களின் கும்பலினால் கொல்லப்பட்டார். எஞ்சியிருந்தவர்கள் நேபுகாத்நேச்சாரின் பழி வாங்குதலுக்குப் பயந்தவர்களாய் யோகனானின் வழிநடத்துதலின் கீழ் எகிப்துக்குத் தப்பி ஓடுகின்றார்கள். எகிப்துக்குத் தப்பியோடுதலை எரேமியா ஊக்கத்துடன் மறுத்தார், ஆனால் தாம் நேசித்த பழமையான நாட்டை விட்டுப் புறப்படும்படி வற்புறுத்தப்பட்டு, எகிப்துக்கு கடந்து சென்றவர்களுடன் இணைந்து கொள்கின்றார். அங்கு எல்லைப் புற நகரான தக்பானேஸில் இம்மாபெரும் தீர்க்கதரிசி தமது கடைசி தீர்க்கதரிசனத்தை எழுதினார். தொடக்க காலக் கிறிஸ்தவப் பாரம்பரிய வரலாற்றின்படி, அவர் தம்முடன் எகிப்துக்கு நாடு கடந்து வந்திருந்தவர்களாலேயே கொலை செய்யப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார் என்பதாகக் கூறப்படுகின்றது; யூதப் பாரம்பரியத்தின்படி, அவர் எகிப்திலிருந்து தப்பி பாபிலோனுக்குச் சென்றதாகக் கூறப்படுகின்றது. ஆனால் ஏசாயா, எசேக்கியேல், தானியேல், பேதுரு, பவுல் மற்றும் யோவான் போன்றவர்களின் மற்ற பல விஷயங்களில் போலவே இவரது விஷயத்திலும் இவரின் எழுத்துக்களினால் வளமூட்டப் பட்டுள்ள வேத வசனங்கள் இவரது வாழ்க்கையின் முடிவுக் காட்சிகள் குறித்து மவுனமாயிருக்கின்றன. எகிப்திலிருந்து இவர் நாடு கடந்து வந்ததாக எந்த விவரமும் இருப்பதில்லை.*

***2. தானியேலும் பாபிலோனில் முதன் முறை சிறைப்படுதலும்*** *(2 இரா. 24:1; 2 நாளா. 36:5-8; தானி. 1-12).—நேபுகாத் நேச்சார், யூதாவின்மீது மூன்று முறை படையெடுத்தார் என்று நாம் கண்டுள்ளோம். முதல் படையெடுப்பில் (கி.மு. 606), அவர் அரச வம்சத்தின் அழகும் அறிவும்மிக்க நான்கு வாலிபர்களை - தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ*

ஆகியோரை - பிடித்துக் கொண்டு சென்றார். அவர்கள் அரசரின் அரண்மனையில் கனத்திற்குரிய வகையில் கல்வி புகட்டப்பட்டனர், ஆனால் சீக்கிரமே அவர்கள் பாபிலோனிய ஆடம்பரம், மற்றும் பாபிலோனிய விக்கிரகாராதனை ஆகியவற்றிற்கு எதிராக தங்களின் மாண்புமிக்க நிலைப்பாட்டினை வித்தியாசப்படுத்தி/சிறப்பு படுத்திக் காண்பித்தனர்.

*அ. நேபுகாத்நேச்சாரின் கனவு.*—பொன்னால் ஆன தலையும், வெள்ளியால் ஆன மார்பும், வெண்கலத்தால் ஆன தொடையும் இரும்பால் ஆன கால்களும் கொண்டதாக நேபுகாத்நேச்சாரின் கனவில் வந்த சிலை பற்றிய விளக்கம் கூறியதினால் தானியேல் முதன்முதலாகக் கவனத்திற்கு வந்தார். தானியேலினால் விளக்கப்பட்டபடி, தலை நேபுகாத்நேச்சாரையும் பாபிலோன் பேரரசையும் குறித்தது; மற்ற பாகங்கள் அவருடைய இராஜ்யத்தை தொடர்ந்து வந்த மாபெரும் பேரரசுகளைக் குறித்தன.

*ஆ. நெருப்பின் நடுவில் மூன்று பேர்.*—நேபுகாத்நேச்சார் தமது கனவிற்குப் பிறகு பெருமையும் மேட்டிமையும் கொண்டார். அவர் ஒரு பெரிய உருவச் சிலையை அமைத்து, ஒவ்வொரு மனிதரும் அதற்கு முன்பாக விழுந்து வணங்க வேண்டும் என்று ஆணையிட்டார். சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ ஆகியோர் தங்கள் உறுதிப்பாடுகளில் தைரியத்துடன் இருந்து (அவ்வாறு வணங்க) மறுத்து விட்டார்கள். அதற்குத் தண்டனை யாக அவர்கள் அக்கினிச் சூளையில் போடப்பட்டார்கள், ஆனால் அற்புத விதமாகப் பாதுகாக்கப்பட்டார்கள்.

*இ. தானியேலின் தரிசனங்கள்.*—தொடர்ந்து வர இருந்த உலகப் பேரரசுகள் பற்றி தானியேல் தாமே தரிசனங்கள் பலவற்றைக் கண்டிருந்தார்: பாபிலோனியர், பெர்சியர், மெக்கதோனியர், ரோமர் மற்றும் பூமி முழுவதும் நிரம்பி என்றென்றும் நிலைத்து நிற்குமாறு தேவன் அமைக்கவிருந்த ஒரு இராஜ்யம்.

*ஈ. சிங்கக் குகையில் தானியேல்.*—பெர்சியாவின் வல்லமையின் எழுச்சிக்கு முன்பாகப் பாபிலோன் கீழே தாழ்ந்து சென்றதைக் காண்பதற்கு தானியேல் உயிருடன் வாழ்ந்தார். அவரது கட்டளையிடும் வல்லமைகள் பெர்ஸிய அரண்மனையாட்களுக்குப் பொறாமையைத் தூண்டி விட்டது, மற்றும் அன்றாட ஜெபத்தில் அவர் கொண்டிருந்த தேவ நம்பிக்கை யினிமித்தம் அவரை அவர்கள் சிங்கங்களுக்கு இரையாக வீசியெறிந்தார்கள், ஆனால் (தேவனுடைய) அருளிரக்கத்தினால் அவர் பாதுகாக்கப்பட்டார்.

***3. எசேக்கியேலும் பாபிலோனில் இரண்டாம் முறை சிறைப்படுதலும்*** *(2 இரா. 24:8-16; 2 நாளா. 36:9, 10; எசே. 1:1, 2).*—நேபுகாத்நேச்சார், தமது இரண்டாம் படையெடுப்பின் போது (கி.மு. சுமார் 597), பத்தாயிரம் பேரை அடிமைகளாய்ப் பிடித்துக் கொண்டு சென்றார், எசேக்கியேல் தீர்க்கதரிசி யும் அவர்களில் இருந்தார். அவர்கள் கேபார் ஆற்றங்கரையில் குடியமர்ந் தார்கள், அந்த ஆறு பாபிலோனுக்கும் முன்னூறு மைல்கள் மேல் பகுதியில் ஐப்பிராத்து நதியுடன் கலந்தது, அவர்களின் மத்தியில் விரைவில் நாடு திரும்புவோம் என்று வாக்குறுதி அளித்த கள்ளத் தீர்க்கதரிசிகள் எழும்பி னார்கள். எருசலேமில் இருந்த எரேமியா ஒரு கடிதத்தை அவர்களுக்கு

*எழுதினார், அதில் அவர், சிறையிருப்பு (முதல் முறை கி.மு. 606ல் நாடு விட்டுச் சென்றதிலிருந்து தொடர்ந்து) அடுத்து வரும் எழுபது ஆண்டு களுக்கு நீடிக்கும் என்று கூறினார், மற்றும் அங்கே அவர்கள் வீடுகட்டி, தோட்டம் நாட்டியிருக்கும்படி ஆலோசனை அளித்தார் (எரே. 29). எசேக்கியேல் புத்தகத்தின் பிரதான பகுதிகளைத் தந்த தரிசனங்களை அவர் கேபார் நதியண்டையில் தான் கண்டு எழுதினார்; இந்தக் காலகட்டத்தில் தான் "பாபிலோன் ஆறுகளின் அருகே" என்று தொடங்கும் 137ம் சங்கீதம் எழுதப்பட்டது.*

---

குறிப்பு

[1]*2 இரா. 20:17; 21:10-15; 22:14-17; எரே. 25:9-11; 34:2, 3; மீகா. 3:8-12ஐக் காணவும்.*